# கிழக்கு மாகாணத்தில் கருத்து கணிப்பு: புதிய ஜனாதிபதியும் இனப்பிரச்சினையும்

ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவின் அரசாங்கம் இனப்பிரச்சினையில் முக்கிய அம்சம் ஒன்று குறித்து முடிவொன்றுக்கு வந்துள்ளது. ஜனாதிபதியாகப் பதவியேற்று, சுமார் ஒரு மாத காலமாகிய நிலையில், புதிய ஜனாதிபதியின் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன என்ற கேள்வி பலரிடம் இருந்து எழுந்த வேளையில் இம்முடிவு வெளிவந்துள்ளது. பாராளுமன்ற தெரிவுக்குழு வடக்கு -கிழக்கு இணைப்பிற்கு கிழக்கில் 'கருத்துக் கணிப்பு' ஒன்று மேற்கொள்வதாக எடுத்துள்ள தீர்மானமே இதுவாகும்.

சுமார் இரண்டு வருடங்கள் கூடிக்கலைந்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவானது, புதிய ஜனாதிபதியாக டி. பி. விஜயதுங்க பதவி ஏற்பின் கூடிய முதலாவது கூட்டத்திலேயே ஒரு முடிவை எடுத்துள்ளமையானது தெரிவுக்குழுவில் இதுவரை அரசாங்கக் கட்சி வகித்து வந்த பங்கை எவரும் புரிந்து கொள்ள உதவக்கூடியது ஆகும். இதே வேளை, சிங்கள எதிர்க்கட்சிகளைப் பொறுத்து, வடக்கு - கிழக்கு பிரிவினை என்பது ஏற்புடையகொள்கை என்பதால், இக்கருத்துக் கணிப்பிற்கு அவை தமது மனப்பூர்வ சம்மதத்தை தெரிவித்தமையில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கை துண்டாடுவதென்பது சிங்கள ஆட்சியாளரின் திட்டவட்டமான முடிவு என்றாலும் பலம் பொருந்திய ஆட்சியாளர் எனக்கருதப்பட்ட ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில் செய்ய முற்படாததை பதவியேற்று ஒரு மாத காலத்திற்குள் டி. பி. விஜயதுங்க செய்ய முற்பட்டுள்ளார். இது அரசாங்கம் இனப்பிரச்சினை தொடர்பாக புதியதொரு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதையே வெளிக்காட்டுவதாகும்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பதே சிங்கள ஆட்சியாளர்களின் சித்தாந்தமாகும். இச்சிந்தனையில், சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதிகள், தற்போதைய ஆட்சியாளர்கள், இராணுவத் தளபதிகள் என எவரிடமும் வேறுபாடுகள் எவையும் கிடையாது. தமிழர் தேசிய இனப் போராட்டம் ஆரம்பமான பொழுதில் இருந்து இன்றுவரை அவர்களிடம் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.

ஆனால் மூன்றாண்டுகள் தொடராக இடம்பெற்ற இரண்டாம் கட்ட ஈழப் போரில் இராணுவ வெற்றியின் சாத்தியப்பாடு குறித்து கேள்விகள் எழும்பியுள்ளன. இதேவேளை மூன்றாண்டுப் போரில் இராணுவம் சந்தித்த பாரிய இழப்புக்கள் அவர்களின் போரிடும் மனோ உறுதியையும் பெரிய அளவில் பாதிப்படையச் செய்தது.

இந்நிலையில் வடக்கில் இராணுவம் நீண்ட, தொடரான யுத்தத்திற்கு தயாராவதற்கு சிறிது கால அவகாசம் தேவையாக உள்ளது. ஆளணிகள் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது. அத்தோடு, இராணுவத் தலைமையில் ஏற்பட்ட வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியவையாகவும், பாதுகாப்பு அதிகாரிகள் மட்டத்தில் காணப்படும் முரண்பாடுகள் நீக்கப்பட வேண்டியனவாகவும் உள்ளன.

எனவேதான், முழுப்பிரதேசத்திற்குமான இராணுவத் தீர்வு என்பதில் இருந்து சற்று மாற்றி இனப்பிரச்சினை குறித்து கொள்கை ஒன்றை வகுக்க வேண்டியநிலை ஏற்பட்டது. இப்புதிய கொள்கையே நான்கு மாதத்தில் கிழக்கில் கருத்துக் கணிப்பு என்பதாகும்.

இது புதிய ஜனாதிபதியின் திட்டத்தில் உருவான இன்றைய அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ற அணுகுமுறையா? அல்லது ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு முற்பட்ட அணுகுமுறையின் தொடர்ச்சியா? என்பதில் சந்தேகங்கள் இருப்பினும் இவ்விரண்டு கேள்விகளிலும், ஓரளவு அர்த்தமுள்ளதாகவே படுகிறது.

டி. பி. விஜயதுங்காவின் ஆட்சியில் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் கை பின்னணியில் உள்ளது எனப் பல அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள். இதனை வலுச்சேர்ப்பது போல், அண்மையில் யாழ்ப்பாணம் வந்து சென்ற சர்வதேச நிறுவனம் ஒன்றின் பிரதிநிதி ஒருவர் ஆட்சியில் ஜே. ஆரின் பங்குபற்றிக் குறிப்பிடுகையில் "கிழவனே பின்னால் உள்ளது" என்றார்.

இதன் அடிப்படையில் இந்தியா -சிறீலங்கா சமாதான உடன்படிக்கையின் ஒரு பகுதியான கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பை நடத்தும் முடிவிற்கு அரசாங்கம் சென்றுள்ளதாகக் கருதலாம். இந்நிலையில் ஆட்சி மாற்றத்தின் பின் அடிக்கடி பத்திரிகைகள் மூலம் பேசியுள்ள முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது பழைய கொள்கையை வலியுறுத்திப் பேசியுள்ளமை இங்கு சுட்டிக்காட்டப்படக் கூடியதே.

ஆயினும் ஜே. ஆர். ஜெயவர்த்தனா இந்திய இராணுவத்தை வரவழைத்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முற்பட்டதினால் ஏற்பட்ட விளைவுகள் சிங்களவரால் இலகுவில் மறந்துவிடக் கூடியவை அல்ல. இந்நிலையில் மீண்டும் இந்திய இராணுவம் குறித்து பேச்சு எழுந்த போது அதனை அரசாங்கம் திட்டவட்டமாக மறுக்கவேண்டி வந்தது.

இருப்பினும் இந்திய - சிறிலங்கா சமாதான உடன்படிக்கையே அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அடிப்படையாகக் கொண்டுள்ளது போல் தெரிகின்றது. அதில் இருந்தே தற்பொழுது அரசாங்கத்தின் புதிய கொள்கை உருவாகியுள்ளது.

இதன் அடிப்படையில் அரசாங்கம் இனப்பிரச்சினை குறித்து வகுத்துள்ள புதிய திட்டமானது கிழக்கை வடக்கில் இருந்து பிரித்து தனியான ஒரு அரசியல் அலகு ஆக்குவதென்பதாகும். இதற்கு ஒருவகையில், இராணுவ அழுத்தத்தையும், ஒருவகையில் சிங்கள முஸ்லிம் வாக்காளரின் பலத்தையும் பிரயோகிப்பதன் மூலம் ஒரு இராணுவ அரசியல் வெற்றியைப் பெற்றுவிட அரசாங்கம் முயற்சிக்கின்றது.

இதேவேளை, கிழக்கில் கருத்துக்கணிப்பு நடத்துவதென்பது, தெரிவுக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையிலான ஓர் "அரசியல் நடவடிக்கை" எனக்காட்டுவது அரசின் நோக்கமாகும். ஆனால் அடுத்த தெரிவுக்குழுவின் கூட்டத்திற்கு கிழக்குமாகாண இராணுவத் தளபதிகளை அழைத்துள்ளமையானது, கருத்துக் கணிப்பறியும் திட்டம் தெரிவுக்குழு, இராணுவம் என்பனவற்றின் கூட்டுச் செயற்பாடு என்பதைக் காட்டுவதாகவே உள்ளது.



இதனை, தெரிவுக்குழுவின் கூட்டம் இடம்பெற்ற அதே தினத்தில் மட்டக்களப்பின் வடபகுதியில் 'முகுது சுலங்' -'கடல் தென்றல்' -என்ற இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டமை வெளிக்காட்டி நிற்கின்றது. மேலும் தெரிவுக்குழுவின் கோரிக்கைக்கு காத்திராமலே மூன்று மாதத்தில் கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்துவதற்கு ஏற்ற சூழலை உருவாக்கித் தருவதாக இராணுவம் அளித்துள்ள வாக்குறுதியானது இராணுவத் தீர்வின் ஓர் அலகாகவே கருத்துக் கணிப்பும், அதனுடன் இணைந்த தீர்வும் இடம்பெறவுள்ளது.

இதில் முக்கியமான அம்சம் என்னவெனில் இக் கருத்துக் கணிப்பை தமிழர்கள் எவரும் ஏற்கவில்லை என்பதே. கொழும்பில் உள்ள குழுக்களினாலோ அன்றி கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் ஓரளவு ஆதரவு பெற்றுள்ள முஸ்லிம் காங்கிரசினாலோ இக் கருத்துக் கணிப்பைஆதரிக்க முடியவில்லை.

இதன் மூலம் சிறிலங்கா அரசாங்கம் தமிழ்க்குழுக்களுக்கு எதிராக மேற்கொண்ட இக் காலைவாரும் நடவடிக்கையானது அவர்களின் அரசியல் எதிர்காலத்தை பெரும் கேள்விக்குரியதாக்கியுள்ளது.

ஆனால், இவை எவைகுறித்தும் அரசாங்கம் அக்கறைப்படவில்லை. இராணுவத்தின் துணையுடன் ஒரு தீர்வைத் திணிக்க முற்படுகின்றது. இதன் விளைவு அரசாங்கம் எண்ணுவது போல் சாதகமாக இருக்க மாட்டாது.

அரசின் இத்திட்டம் எந்தளவிற்கு நடைமுறைச் சாத்தியமானது என்பது கேள்விக்குரியதே. ஏனெனில், கிழக்கு மாகாணத்தை இராணுவ ரீதியாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருதல் என்பது இன்று நேற்று ஆரம்பமானதொன்றல்ல. இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பமான காலத்தில் இருந்து தொடக்கப்பட்ட ஒன்று. இது சிங்கள அரசியல் -இராணுவ தலைமைகளின் பெரு விருப்பும் கூட. ஆனால் அது சாத்தியமாகவில்லை. தற்போதைய இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா கடந்த வருட ஆரம்பத்தில் கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் கமில்டன் வனசிங்காவுடன் ஏற்பட்ட முரண்பாட்டின் போதும் கூட மூன்று மாத காலத்தில் கிழக்கை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதாக சூளுரைத்தார். ஆனால் அது கூட சாத்தியமாகவில்லை. அடுத்ததாக 1988 ஆம் ஆண்டு தேர்தல் மூலம் உருவாக்கப்பட்ட வடக்கு -கிழக்கு மாகாணசபை, ஒருலட்சம் இந்திய இராணுவத்தின் உதவியுடனும் தனது அதிகாரத்தை விஸ்தரிக்க முடியவில்லை. இந்நிலையில் புவியியல் ரீதியாக இணைந்துள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களை நிர்வாக ரீதியாக இலகுவாகத் துண்டாடி, தமிழரின் போராட்டத்தை வடக்குக்குள் சுருக்கி விடலாம் என சிறிலங்கா அரசாங்கம் எண்ணுவது தவறான கணிப்பீடாகவே இருக்கும். ■

**- ஜெயராஜ்**

நன்றி: ஈழநாதம்

## பலவீனத்தை...

இவ்வாறான நிலையில் புதிய அமைப்பின் உருவாக்கம் அரசியல் அரங்கில் முக்கியமானதாகும். இருப்பினும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் அதன் தலைவர் தொண்டமான் போல பலம் பொருந்திய -பேரம் பேசும் சக்தியை முஸ்லீம்கள் பெறுவது கடினம். ஏனெனில் இ. தொ. கா. வின் பேரம் பேசும் சக்திக்கு மலையக தோட்டத்தொழிலாளர்களின் ஏகோபித்த ஆதரவு மட்டும்தான் காரணமில்லை. மலையகப் பகுதிகளில் செறிவாக வாழ்வதும், சிறீலங்காப் பொருளாதாரத்தில் மலையக மக்களின் உழைப்பு வகிக்கும் பாத்திரம் போன்றவை கூட தொண்டமானுக்குப் பலம் சேர்ப்பவையாகும்.

தொடர்ச்சியானதொரு நிலப்பரப்பையும், சுயசார்பான பொருளாதார அமைப்பையும் கொண்டிருக்காத முஸ்லீம் சமூகம் ஒரு சில மாவட்ங்களில் செறிவாக வாழும் போதும் எல்லா மாவட்டங்களிலும் பரந்துள்ள தன்மையினால் ஒரு சக்தியாகப் பரிணமிப்பது சாத்தியம் என்று சொல்வதற்கில்லை. எனினும் 1948 முதல் சிங்களப் பௌத்த பேரினவாதம் சிறுபான்மை இனங்கள் மீது மேற்கொண்டுவரும் அடக்குமுறையை சிறீலங்கா முஸ்லீம்கள் இப்போதுதான் புரிந்து கொள்ள ஆரம்பித்துள்ளனர் என்று கொள்ளலாம். ■

நன்றி: ஈழநாதம்

## போராளியின்....

மர்கள் குண்டுகளைக் கொட்டின. ரவைகள் ஆயிரக்கணக்கில் எம்மைக் கடந்து சென்றன. எதிரியின் பீரங்கித் தாக்குதல் கடுமையானதாக இருந்தது. தொடர்ந்து வந்துகொண்டிருந்த எறிகணைகளில் ஒன்று எங்களுக்கு மிக அருகாக விழுந்து வெடித்தபோது, அந்தத் துயரம் நிகழ்ந்தது .....சின்னாவை நாங்கள் இழந்துவிட்டோம்; சின்னாவோடு சீனுவும், தமிழ்மாறனும் கூட.

**- பாண்டியன்**


மாவீரர்
வெற்றிக் கிண்ணவிளையாட்டுப் போட்டி
*1993*

| காலம் | நேரம் | | இடம் | போட்டிகள் |
|---|---|---|---|---|
| 14.08.1993 | 8⁰⁰-22⁰⁰ | வரை | Sporthalle Mülfort<br>Real schul str -10<br>4050 Mönchengladbach-2 | கரப்பந்தாட்டம் (செற்அப்) |
| 21.08.1993 | 8⁰⁰-22⁰⁰ | வரை | BSA – Geneicken<br>Schloß str -330<br>4050 Mönchengladbach-2 | உதைபந்தாட்டம் |
| 28.08.1993 | 8⁰⁰-22⁰⁰ | வரை | Granzland Stadion<br>Jahn Platz -20<br>4050 Mönchengladbach | மெய்வல்லுநர் |

-நன்றி-

தமிழ் மாணவர் அமைப்பு-ஜேர்மனி T. S. O- e.V Postfach 10 11 33, 41411 Neuss, Tel/Fax.: 05251/67482